## தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை – 2017

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச்சட்டத்தின் 21 (2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01**

நியமத்தின் 32 ஆம் பிரிவு பிரகாரம்,வருமானம் மற்றும் செலவுகளை எதிரீடு செய்யக் கூடாததெனினும் இரத்தினக்கல் அகழ்தல் செயற்றிட்டங்களிலிருந்து கிடைத்த ரூ.208,885,806 வருமானம் மூலம் குறித்த செயற்றிட்டங்களுக்குரிய ரூ.82,104,236 செலவு எதிரீடு செய்யப்பட்டு ரூ.126,781,570 தேறிய வருமானம் மட்டும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07**

மீளாய்வாண்டில் பணமாக செலுத்தப்பட்டிருந்த பணிக்கொடைகளின் பெறுமதி ரூ.10,119,925 ஆக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அது ரூ. 8,423,000 ஆக காட்டப்பட்டிருந்தமையினால் காசுப் பாய்வு ரூ.1,696,925 குறைவாக காட்டப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

---

(i) நியமத்தின் 51 ஆம் பிரிவு பிரகாரம், நடைமுறையல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தினால் கிரயம் ரூ.36,310,655 ஆன முழுமையாக தேய்மானமிடப்பட்ட 14 வாகனங்கள் தொடர்ந்தும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. அதன்படி மதிப்பீட்டு வழுவை இலங்கை கணக்கீட்டு நியமம் 03 இன்படி திருத்தம்செய்து சாதாரண பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 34 ஆம் பிரிவு பிரகாரம்,ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் சாதாரண பெறுமதி கணிசமாகவும் விரைவான மாற்றங்களுக்கு உட்படும் போதும் குறித்த சொத்துக்கள் மறுபடி விமைதிக்கப்பட்டு சாதாரண பெறுமதியை கணக்குகளில் பதிய வேண்டியபோதிலும், அவ்வாறு செயலாற்றாது 14 வருடங்களுக்கு முன்னர் அதிகாரசபையினால் கொள்வனவு செய்யப்பட்ட காணி அதன் கிரயமான ரூ.29 மில்லியன் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(iii) நியமத்தின் 27ஆம் பிரிவு பிரகாரம், நிதிக் குத்தகை முறையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 03 வாகனங்களுக்கு ஏற்புடைய கிரயத்தை கணக்குகளில் பதிவதற்குப் பதிலாக செலுத்திய தவணைப்பணங்களில் வட்டியும் சேர்ந்த பெறுமதியான ரூ.2,228,028 மூலதனமாக்கப்பட்டிருந்தது.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37**

---

(i) நியமத்தின் 14 ஆம் பிரிவு பிரகாரம்,நிகழத்தக்க பொறுப்பு பொருட்டு உண்மையான மதிப்பீட்டினை நிச்சயமாக இனங்காண முடியுமெனின் மாத்திரம் நிகழத்தக்க பொறுப்பு பொருட்டு நிதியேற்பாடு மேற்கொள்ள வேண்டியபோதிலும் அவ்வாறு நிச்சயமாக இனங்காணாமல் நிகழத்தக்க பொறுப்பாக ரூ.7,500,000 காட்டப்பட்டிருந்தது. இருப்பினும், நிறுவனத்தின் சட்டப் பிரிவு கணக்காய்வுக்கு உறுதிப்படுத்தியவாறு அது ரூ.500,000 மாத்திரம் ஆனததினால் திரண்ட இலாபம் ரூ.7,000,000 குறைவாகவும் நடப்புப் பொறுப்புக்கள் குறித்த பெறுமதியினால் அதிகமாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் பல்வேறு தரப்பினர்களினால் அதிகாரசபைக்கு எதிராக 38 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும் நியமத்தின் 86 ஆம் பிரிவு பிரகாரம், அது தொடர்பில் நிதிக் கூற்றுக்களின் குறிப்புகளின் கீழ் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

---

கணக்கீட்டுக் கொள்கைகளின்படி, ஒவ்வொரு கணக்கீட்டு காலப்பகுதியிலும் ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம்மற்றும் கட்புலனாகா சொத்துக்களின் முன் கொண்டு செல்ல வேண்டிய பெறுமதியை மீளாய்வுசெய்து கணக்குகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுவதாக கணக்கீட்டுக் கொள்கைகளின் கீழ் காட்டப்பட்டிருப்பினும், அவ்வாறு சீராக்கங்களை மேற்கொள்ளாது ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம், பெற வேண்டிய மீதிகள், வைப்புக்கள், முற்பணங்கள்மற்றும் வேறு சொத்துக்கள் என்பன பொருட்டு ஒவ்வொரு வருடமும் சேதமாக்கும் நட்டங்களாக மொத்தமாக ரூ.7,929,609 படியான சமமான பெறுமதிகளில் கணக்குகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 3 வருடங்களுக்கு முன்னர் இடித்து அகற்றப்பட்ட எகலியகொடையில் அமைந்துள்ள பிராந்திய அலுவலக கட்டடத்தின் கிரயமான ரூ.5,460,000 மற்றும் திரண்ட தேய்மானம்ரூ.3,727,466 ஆகியவற்றை புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் மீளாய்வாண்டிலும் முந்திய 2 வருடங்களிலும் முறையே ரூ.109,400 மற்றும் ரூ.1,218,000 தேய்மான ஏற்பாடு காரணமாக மீளாய்வாண்டின் இலாபம் ரூ.109,400 வினாலும், பிடித்துவைக்கப்பட்ட ஊதியம்1,218,000 வினாலும் குறைத்து காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பல வருடங்களாக பயன்படுத்தப்பட்டுவரும் 2 வாகனங்களின் பெறுமதியை இனங்கண்டு கணக்குகளில் பதிவதற்குநடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கடந்த வருடத்தில் வருமான வரி மிகை ஏற்பாடு ரூ.43,749,999 ஐ கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் நடப்புப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்ட செலுத்த வேண்டிய நியதிச்சட்ட கொடுப்பனவுகள் குறித்த அளவிலும் அதிகமாகவும், பிடித்துவைக்கப்பட்ட ஊதியம் சமமான அளவுகளில் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

வெளிநாட்டு இரத்தினக்கல் கண்காட்சிகளுக்கு ஏற்புடைய செலவுகள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் வழங்கியிருந்த பங்களிப்பாக நிதிக் கூற்றுக்களில் தரப்பட்டுள்ள பெறுமதிகளுக்கிடையே பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான காரணங்கள் தெளவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

| | **நிதிக் கூற்றுக்களின் படி** | **ஏற்றுமதி பிரிவின்அறிக்கைப்படி** | **வேறுபாடு** |
|---|---|---|---|
| | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** |
| அலுவலர்களது வெளிநாட்டுப் பயண செலவு | 6,067,092 | 9,673,868 | 3,606,776 |
| கண்காட்சி செலவு | 75,348,513 | 63,119,390 | 12,229,123 |
| ஏற்றுமதியாளர்களது பங்களிப்பு | 47,924,168 | 50,107,159 | 2,182,991 |

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 யூலை 20 முதல் 07 மாத காலத்தினுள் சீதாவாக்கை ஆறு அவத்தைIIIசெயற்றிட்டத்திலிருந்து பெற்ற இரத்தினக்கல் 46 லொட் தொடர்பான விபரங்கள் அடங்கிய நாளாந்த ஆவணத்தை கணக்காய்வு பொருட்டு சமர்ப்பிக்காத காரணத்தினால் குறித்த இரத்தினக்கல் இருப்பு திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நிதிக் கூற்றுக்களில் தரப்பட்டிருந்த ரூ.439,534 ஆன 2 நுகர்வுப்பொருள்கள் மற்றும் ரூ.183,548 ஆன கெவுடா இருப்பு பௌதிகரீதியில் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

01 ஆண்டு முதல் 07 ஆண்டு காலமாக உள்ள 11 மதிப்பிழந்த காசோலைகளுக்கு ஏற்புடைய ரூ.239,872 மீதியை அறவிட்டுக்கொள்வதற்குத் தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கீழே காணப்படும் சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச்சட்டம் | |
| (i) 14 (எ) ஆம் பிரிவு | இரத்தினக்கல் காணிகளை ஏலவிற்பனைக்காக அதிகாரசபைக்கு உரித்துமாற்றும்போது காணி அமைச்சரினதும் சுற்றாடல் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினதும் அங்கீகாரம் பெற வேண்டியபோதிலும், இரத்தினபுரி புனித ஜோகீம் பெருந்தோட்டத்தில் 04 ஏக்கர், 02 றூட், 19 பேச்சஸ் காணித் துண்டு இரத்தினக்கல் அகழ்வதற்காக ஏலவிற்பனைமூலம் உரித்துமாற்றும்போது இயைபான அங்கீகாரங்கள் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 18 (1) ஆம் பிரிவு | காணியில் ''இரத்தினக்கல் அகழ்வதற்கான உரிமையை ஏலவிற்பனைமூலம் பெற்றுள்ள சந்தர்ப்பத்தில் அந்நபர் அவ் ஏலவிற்பனையின்போது செலுத்தப்பட்ட தொகையில், குறித்த காணியிலிருந்து கிடைக்கும் இரத்தினக்கற்களுக்கு ஏற்புடையதாக ஏதேனும் இறை அடங்கியதாக கருதப்படுதல் வேண்டும்'' என காட்டப்பட்டிருப்பினும், அதிகாரசபையானது குறித்த இறை எத்தனை சதவீதம் என தீர்மானித்திருக்கவில்லை. மீளாய்வாண்டில் காணி ஏலவிற்பனை மூலம் ஏறத்தாழ ரூ.24,277,611 வருமானம் ஈட்டியிருப்பினும் அதில் இறைபணம் எதனையும் திறைசேரிக்கு செலுத்தியிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம்11 ஆம் பிரிவு | நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படாமல் மொத்தமாக ரூ.1,192,800,281 தொகை திறைசேரி உண்டியல்களிலும் நிலையான வைப்புக்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தன. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையினது நிதி ஒழுங்குவிதி 137 | அங்கீகரிக்கப்படாத ரூ.236,389 பெறுமதியான 02 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அதிகார எல்லையை மீறி அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூ.561,567 பெறுமதியான 02 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் பொருட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| ஈ) | 2015 யூன் 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | (i) வேளைக்கேற்ற இடைக்கால கட்டுநிதி வழங்கக்கூடிய உச்ச எல்லையான ரூ.100,000 ஐ விஞ்சிய சந்தர்ப்பங்களில் அதற்கான பூரண அனுமதியை திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறு அனுமதியை பெற்றுக்கொள்ளாமல் 20 சந்தர்ப்பங்களில் ரூ.118,000 முதல் ரூ.200,000 வரையான வீச்சினுள் மொத்தமாக ரூ.3,484,000 பெறுமதியான வேளைக்கேற்ற இடைக்கால கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. மேலும், முற்பணம் வழங்கும்போது தேவைப்பாடு கருத்திற் கொள்ளப்படாதிருந்ததுடன் 04 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூ.6,700 முதல் ரூ.156,700 வரையான முற்பணங்கள் 5 முதல் 22 நாட்கள் வரையான காலம் நிறுத்திவைத்துக்கொண்டு முழுத்தொகையும் மீண்டும் கொடுத்துதீர்க்கப்பட்டிருந்தது.<br><br>(ii) இயைபான பணி முடிவடைந்தவுடனே வேளைக்கேற்ற இடைக்கால கட்டுநிதியை கொடுத்துதீர்க்க வேண்டிய போதிலும், அதிகாரசபையானது 42 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூ.2,564,330 முற்பணங்கள் 12 முதல் 154 நாட்கள் வரையான காலமும், விசேட செயற்றிடங்கள் பொருட்டு 06 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூ.950,000 முற்பணங்களை கொடுத்துதீர்த்தல் 2 முதல் 5 மாதங்கள் வரையான காலமும் தாமதமாகி இருந்தன. |

## 2.5 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டில் புத்தாண்டு படியாக ஒரு ஊழியருக்கு ரூ.6,000 வீதமாக ரூ.1,578,000 திறைசேரி அங்கீகாரமின்றி ஊழியர் நலன்புரி சங்கம் ஊடாக செலுத்தப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டிலும் ரூ.1,600,000 செலுத்தப்பட்டிருந்ததுடன் கணக்காய்வின்போது சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

---------------------

### 3.1 நிதிசார் விளைவுகள்

---------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின்படி,மீளாய்வாண்டில் அதிகாரசபையின் நிதிசார் விளைவுரூ.113,338,005 தேறிய இலாபமாக இருந்தவுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் தேறிய இலாபம்ரூ.131,060,612 விளைவித்திருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூ.17,722,607 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் நிதிசார் வருமானம் ரூ.29,189,561ஆல் அதிகரித்திருந்ததுடன் வரி செலவினம் ரூ.40,635,580 ஆல் குறைவடைந்தமையும்,காணி ஏலவிற்பனை வருமானம் மற்றும் பரிசோதனைக்கான அறவீடுகள் மொத்தமாக ரூ.89,703,638 ஆல் குறைவடைந்தமையும் மேற்படி நிதிசார் விளைவுகளின் வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக விளங்கின.

மீளாய்வாண்டுமற்றும் முன்னைய 4 ஆண்டுகளில் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வு செய்கையில் 2013 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை நிதி மிகை பெற்றிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டில் ரூ.43,939,388 குறைவினை பெற்றிருந்ததுடன் மீளாய்வாண்டில்மீண்டும் ரூ.113,338,005 மிகையைப் பெற்றிருந்தது. இருப்பினும், நிதிசார் விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், அரசுக்கு செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்கள் பொருட்டான தேய்மானம் ஆகியனவற்றை மீண்டும் சீராக்கும்போது 2013 ஆம் ஆண்டில் ரூ.273,309,778 ஆன பங்களிப்பு 2016 ஆம் ஆண்டளவில் ரூ.263,205,729 வரை குறைந்திருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியில் ரூ.292,969,699 வரைமீண்டும் வளர்ச்சியடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------

### 4.1 செயலாற்றல்

---------------

#### 4.1.1. திட்டமிடல்

----------------

**(அ) ஒன்றிணைந்த திட்டம்**

-----------------------

(i) 2003 யூன் 02 திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது தொழில்முயற்சி சுற்றறிக்கையின் 5.3 ஆம் பிரிவின் பிரகாரம், மீளாய்வாண்டினை உள்ளடக்கிய அதிகாரசபையின் ஒன்றிணைந்த திட்டம்நாளதுவரைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச்சட்டத்தின் 14 ஆம் பிரிவில் அடங்கியுள்ள பின்வரும் பணிகள் ஒன்றிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

- கைத்தொழிலின் விருத்தி பொருட்டு விசேடமாக **வெப்ப சுத்திகரித்தல்** மற்றும் இரத்தினக்கல் வெட்டுதல் தொடர்பில் நபர்களை பயிற்றுவித்தலும் மேம்படுத்தலும்.

- எதிர்காலத்தில் எதிர்பார்க்கக்கூடிய கொள்வனவாளர்கள் மத்தியில் இரத்தினக்கல் மற்றும் ஆபரண கைத்தொழில் மீது நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல்.

- இரத்தினக்கற்கள் சட்டவிரோதமாக இலங்கைக்கு வெளியே எடுத்துச்செல்வதையும் சட்டவிரோதமாகஇரத்தினக்கல் அகழ்தலையும் தடுத்தல்.

- இலங்கையினுள் இரத்தினக்கல் மற்றும் ஆபரண கைத்தொழிலை விருத்திசெய்வதற்காக அரச திணைக்களங்களிடையே தேவையான தொடர்புகளை ஏற்படுத்துதல்.

(ஆ) அதிகாரசபையின் தொழிற்பாடுகளில் அடங்கிய தங்க இறக்குமதியாளர்கள் பொருட்டு வசதிகளை அளித்தல், இலங்கையில் இரத்தினக்கல், ஆபரண பரிமாற்றம் பொருட்டு வசதிகளை அளித்தலும் மேம்படுத்தலும், ரத்ணதீப வர்த்தககூடத்தை நடாத்துதலும் முகாமைசெய்தலும் போன்ற பணிகளை நிறைவேற்றுவதற்குரிய செயற்பாடுகளை செயல் திட்டத்தில் உள்ளடக்காமை.

(இ) இரத்தினக்கல் ஏற்றுமதிமூலம் அந்நிய செலாவணியை உழைக்கும் உபசெயற்பாடுகளின் முன்னேற்றம் செயலாற்றல் அறிக்கையில் வெவ்வேறாக காட்டப்பட்டிருந்ததுடன் அதிகாரசபையின் சட்ட பொறிமுறையை செயற்படுத்துதல் மற்றும் பதவியினர் செயலாற்றலை மதிப்பிடுதல் போன்ற செயற்பாடுகளின் செயலாற்றல் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வருடாந்த செயல் திட்டத்தின் இலக்குகளை எய்தும் முன்னேற்றத்தை பரிசீலிப்பதற்காக முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2006 அரசாங்க பெறுகை வழிகாட்டுநெறியின் வழிகாட்டல் இல. 4.2 பிரகாரம், அதிகாரசபையின் பிரதான பெறுகைத் திட்டம் அங்கீகரிக்கப்பட்ட வரவுசெலவு மதிப்பீட்டிற்கு ஏற்ற விதத்தில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.1.2. செயற்பாட்டுத்தன்மையும் மீளாய்வும்

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் செயல் திட்டத்தில் வருடத்தினுள் செயற்படுத்துவதற்காக 46 செயற்பாடுகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், அதில் ரூ.268,920,000 செலவுசெய்து நிறைவேற்ற வேண்டிய 04 செயற்பாடுகள் மற்றும் பெறுமதி மதிப்பிடப்பட்டிராமல் இருந்த 03 செயற்பாடுகள் ஆகியவற்றை வருடத்தினுள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் இறுதியில் முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 07 செயற்பாடுகள் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அவற்றின் பௌதிக முன்னேற்றம் நூற்றுக்கு 56 முதல் 88 வரை இருந்தது.

(ஆ) வருடத்தினுள் ஏலவிற்பனை செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த இரத்தினக்கல் காணிகளின் எண்ணிக்கை 10 ஆக இருந்தபோதிலும் 04 காணிகள் மற்றும் குழிகள் 24 ஏலவிற்பனைகள் நடாத்தப்பட்டிருப்பினும் எதிர்பார்த்த நிதிச் செயலாற்றலை அடைந்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் செயல் திட்டத்தில் புதிய சந்தைகளை தேடுதல் மற்றும் சந்தைகளை உறுதிப்படுத்திக்கொள்ளுதல் கீழ் 16 வெளிநாட்டுக் கண்காட்சிகள்

மற்றும் 05 உள்நாட்டுக் கண்காட்சிகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் 15 வெளிநாட்டுக் கண்காட்சிகள் மற்றும் 12 உள்நாட்டுக் கண்காட்சிகள் நடாத்தப்பட்டிருந்தன. எனினும், தேடிக்கொண்ட/ உறுதிப்படுத்திக்கொண்ட புதிய சந்தைகள் தொடர்பிலான தகவல்கள் காட்டப்பட்டிருக்கவில்லை என்பதுடன் நடாத்தப்பட்டிருந்த உள்நாட்டுக் கண்காட்சிகளும் இயைபான குறிக்கோள்களை எய்துவதற்கு உறுதுணையாக அமைந்தது என்பதற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபை இரத்தினக்கல் அகழ்தல் பொருட்டு காணிகளின் உரிமையை மாற்றுதல், ஒப்படைக்கப்பட்டுள்ள இரத்தினக்கற்களை விற்பதற்காக ஏலவிற்பனை மேற்கொள்ளுதல், காணிகளை ஏலவிற்பனை செய்யும்போது காணி துண்டொன்றின் ஆகக்குறைந்த கூறுவிலையை தீர்மானித்தல் மற்றும் ஏலவிற்பனை செய்யும் இரத்தினக்கற்களின் பெறுமதியை மதிப்பிடுதல் என்பன தகுதியுள்ள குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்திற்குச் சொந்தமான இரத்தினபுரி புனித ஜோகீம் பெருந்தோட்டத்தின் 04 ஏக்கர், 02 றூட், 19 பேச்சஸ் காணித் துண்டு இரத்தினக்கல் அகழ்வதற்காக அதிகாரசபையினால் ஏலவிற்பனை செய்யும்போது சுற்றாடல் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. ஏலவிற்பனையின் பின்னர் எஞ்சியிருந்த 04 காணித் துண்டுகள் விலைமனு கோரி விற்கப்பட்டிருப்பினும், அதற்காக காணி உரிமையாளரான தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்திடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை என்பதுடன் ஏலவிற்பனையின் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருந்த காணி விற்பனையானது குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) ஏலவிற்பனைக்கான இரத்தினக்கற்கள் அதிகாரசபையினால் விலைமதிப்பு செய்யப்படும்போது மதிப்பீட்டு விலைக்கும் விற்பனை விலைக்கும் இடையில் நூற்றுக்கு 20 வேறுபாடு இருத்தல் சாதாரண நிலைமையாக கருதி செயலாற்றப்பட்டிருந்தது. எனினும், சீதாவாக்கை ஆறு செயற்றிட்டத்தின் இரத்தினக்கல் லொட் 57 ஐ ஏலவிற்பனை செய்யும்போது லொட் 43 இன் விலை வேறுபாடு நூற்றுக்கு 110 முதல் நூற்றுக்கு 1,168 வரையான வீச்சில் இருந்தது.

**(ஈ) குழிகள் விற்பனைசெய்தல் மற்றும் அகழ்தல் செயற்றிட்டங்களை செயற்படுத்துதல்**

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் தோன்றும் இரத்தினக்கல் குழிகளை அதிகாரசபை பொறுப்பேற்று 24 ஏலவிற்பனைகளை நடாத்தியிருப்பதுடன், அதன்மூலம் ரூ.20,152,755 வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. அதுதொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பல சந்தர்ப்பங்களில் ஏலவிற்பனைகளில் விற்கப்படாது எஞ்சியிருந்த இரத்தினக்கல் குழிகளின் ஆகக்குறைந்த கூறுவிலையை குறைத்து மீண்டும் ஏலவிற்பனை செய்திருப்பினும் அதற்காக விலை தீர்மானிக்கும் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) கஜுவத்த மாடுவாகல பாதையில் தோன்றிய இரத்தினக்கல் குழிகளில் ஏலவிற்பனை செய்யப்படாதிருந்த லொட் 09 ஐ கழுவுவதற்கு வெளி முயற்சியாளரொருவர் தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன் குறித்த செயற்றிட்டத்திற்கு வைக்கவேண்டிய ஆகக்குறைந்த கூறுவிலையை நியாயமான காரணங்களை குறிப்பிடாது ரூ.75,000 இருந்து ரூ.10,000 வரை குறைப்பதற்கு தலைவர் செயற்பட்டிருந்தார்.

(iii) அகற்றப்படுகின்ற இரத்தினக்கல் குழிகளை கழுவுதல் தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுத்தல் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

(iv) உடவளவை நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நன்னீர் மீன் வளர்க்கும் நிலையத்தில் மீன்வளர்ப்பு குளங்களை அமைக்கும்போது அகற்றப்படுகின்ற குழிகளை அகழ்வுசெய்யும் நீண்டகால செயற்றிட்டம் பொருட்டு ரூ.1,600,100 க்கு முயற்சியாளரொருவர் தெரிவுசெய்யப்பட்டு செயற்றிட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. எனினும், அதற்காக குறித்த காணியின் உரிமையைக் கொண்டிருந்த கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அபிவிருத்தி நடவடிக்கையின்போது அகற்றப்படுகின்ற குழிகளின் மண் மாத்திரம் அதிகாரசபைக்கு வழங்குவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தும், பெருமளவு பிரதேசம் தோண்டப்பட்டு அகழ்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறித்த தோண்டல் நடவடிக்கைக்காக 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச்சட்டத்தின் 14(எ) ஆம் பிரிவின் பிரகாரம் காணி அமைச்சரினதும் சுற்றாடல் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரினதும் இணக்கப்பாடு பெறப்பட்டிருக்கவில்லை.

(v) இரத்தினக்கல் குழிகளில் அகழ்தல் செயற்றிட்டங்களின் தேறிய வருமானத்தை அதிகாரசபைக்கும் தொழில்முயற்சி தரப்பினர்களுக்கும் இடையில் பகிர்ந்தளித்தல் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட நிச்சயமான முறையியலொன்று இல்லை என்பதுடன் உடவளவை இரத்தினக்கல் அகழ்தல் செயற்றிட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்று 2016 திசெம்பர் 17 ஆம் திகதி முதல் 31 சந்தர்ப்பங்களில் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட 1417.83 கிராத் நிறையுள்ள இரத்தினக்கற்களை ஏலவிற்பனை செய்து வருமானம் திரட்டிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2009 ஆம் ஆண்டில் ஆய்வுகூடமொன்றை ஆரம்பிக்கும் முகமாக இரத்தினக்கல் ஏற்றுமதியாளர்களினதும் அதிகாரசபையினதும் ரூ.92,948,578 மூலதன பங்களிப்புடனான தனியார் கம்பனியொன்று தாபிக்கப்பட்டிருந்தும் கணக்காய்வு திகதியான 2018 மே 04 ஆம் திகதி வரையில் கம்பனிப் பதிவு மட்டும் இடம்பெற்றிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் தனியார் கம்பனி பெயரில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த தொகை ரூ. 139,612,000 ஆக இருந்ததுடன் 2016 ஆகஸ்ட் 16 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம். குறித்த நிதியத்தை அதிகாரசபைக்கு மீண்டும் பெற்றுக்கொள்வதற்கும் அமைச்சரவையின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) களுகங்கை தவிர்ந்த நியாவக இரத்தினக்கல் அகழ்தல் செயற்றிட்டம் பொருட்டு மத்திய சுற்றாடல் அதிகாரசபையின், நீர்ப்பாசன திணைக்களத்தின், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மற்றும் இயைபான பிரதேச செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காது செயற்றிட்டத்தை செயற்படுத்துவதற்காக 2017 ஆகஸ்ட் 10 ஆம் திகதி முயற்சியாளரொருவரை தெரிவுசெய்வதற்கு செயலாற்றி இருந்தது.

(எ) அதிகாரசபையின் குறிக்கோள்களில் ஒன்றான இலங்கைக்கு வெளியே இரத்தினக்கல், ஆபரண சந்தைகளை விஸ்தரிப்பதற்காக வெளிநாட்டுக் கண்காட்சிகளில் ஏற்றுமதியாளர்களை பங்குபற்றச் செய்வித்தல் வேண்டும் என்பதுடன் அதன் பொருட்டு மீளாய்வாண்டினுள் 14 ஏற்றுமதி கண்காட்சிகள் நடாத்தப்பட்டு ரூ.75.3 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அதுசம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஏற்றுமதியாளர்கள் வெளிநாட்டுக் கண்காட்சிகளில் பங்குபெறச் செய்வித்தல் மூலம் இரத்தினக்கல் ஏற்றுமதி வருமானம் உண்மையாகவே அதிகரித்துள்ளதா என்பதனை பரீட்சித்துப் பார்ப்பதற்கும் விற்பனைகளின் சரியானதன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் முறையியலொன்று இல்லாத காரணத்தினால் குறித்த செலவின் பயனுறுத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

(ii) மீளாய்வாண்டினுள் நடாத்தப்பட்ட 14 வெளிநாட்டுக் கண்காட்சிகள் பொருட்டு இலங்கை ஏற்றுமதியாளர்கள் 167 பேர் பங்குபற்றி இருந்தனர் என்பதுடன் அவர்கள் கண்காட்சிகள் பொருட்டு முன்வைத்த இரத்தினக்கற்களின் மதிப்பீட்டு பெறுமதி (FOB) ரூ.21,053 மில்லியன் ஆக இருந்தது. இந்த இரத்தினக்கற்களில் ரூ.2,355 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதியுடைய இரத்தினக்கற்கள் விற்கப்பட்டிருந்ததுடன் அதன்மூலம் அதிகாரசபைக்கு கிடைத்த வருமானம் ரூ.11.6 மில்லியன் ஆக மாத்திரம் இருந்தபோதிலும், இந்த கண்காட்சிகள் பொருட்டு அதிகாரசபையின் நிதியத்திலிருந்து ரூ. 22.7 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(iii) 2017 ஏற்றுமதி மேம்பாட்டுத் திட்டத்தில் அடங்கிய 2 கண்காட்சிகள் பொருட்டு பங்குபெறச் செய்விப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுடன் திட்டத்தில் அடங்காதிருந்த கண்காட்சியொன்றுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி ரூ. 2,230,817 செலவுசெய்து இந்தோனேசியாவில் நடாத்தப்பட்டிருந்தது.

(iv) நடாத்தப்பட்டிருந்த 4 கண்காட்சிகளுக்கு மதிப்பிடப்பட்டிருந்தவாறு ஏற்றுமதியாளர்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளாத காரணத்தினால் ரூ.990,752 அதிகாரசபைக்கு மேலதிகமாக செலவிட நேரிட்டது என்பதுடன் 3 கண்காட்சிகளின் மதிப்பீடுகளை விஞ்சி ரூ.6,361,362 மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது.

(v) அதிகாரசபை 4 கண்காட்சிகள் பொருட்டு ரூ.12,942,385 செலவிட்டு இருப்பினும், அவற்றில் 13 ஏற்றுமதியாளர்கள் மட்டுமே பங்குபற்றி இருந்ததுடன் ஒரு கண்காட்சி பொருட்டு ஏற்றுமதியாளர் ஒருவரேனும் பங்குபற்றி இருக்கவில்லை.

(vi) 71 ஏற்றுமதியாளர்கள் பங்குபற்றியிருந்த 2 கண்காட்சிகள் பொருட்டு ஏற்றுமதியாளர்களிடமிருந்து மேலதிக பங்களிப்பை பெற்றுக்கொள்ளாத காரணத்தினால் ரூ.7,457,740 ஆன மொத்த செலவில் ரூ.4,981,650 அதிகாரசபைக்கு செலவிட நேரிட்டுள்ளது.

(vii) வெளிநாட்டு கண்காட்சிகள் பொருட்டு அதிகாரசபையின் அலுவலர்கள் பங்குபற்றுதல் தொடர்பில் உரிய முறையியலொன்று இருக்கவில்லை என்பதுடன் ஒரே அலுவலர் குழுவினரே பங்குபற்றி இருந்தனர். அங்கு 04 அலுவலர்கள் 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் 5 க்கும் 7 க்கும் இடைப்பட்ட கண்காட்சிகளில் பங்குபற்றி இருந்தனர். மேலும், 2017 ஜூன் மாதம் சீனாவில் நடைபெற்ற ஒரு கண்காட்சியில் 04 அலுவலர்கள்

பொருட்டு ரூ.1,654,400 போன்ற அதிகளவு செலவு அதிகாரசபையினால் உறப்பட்டிருந்தது.

(vii) வெளிநாட்டு கண்காட்சிகள் முன்னைய ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், விமான ஆசனங்களை நேரகாலத்தோடு ஒதுக்கிக் கொள்ளாத காரணத்தினால் சீனா மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் நடைபெற்ற கண்காட்சிகள் பொருட்டு சாதாரண கட்டணங்களுடன் ஒப்பிடுகையில் ரூ.441,374 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டு பொருட்டு ஊக்குவிப்பு படியாக மதிப்பிடப்பட்ட இலாபத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் ரூ.22,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2003 யூன் 02 திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது தொழில்முயற்சி சுற்றறிக்கையின் 8.3.3 ஆம் பிரிவின் பிரகாரம், அதற்காக திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 1993 இன் 50 ஆம் இலக்க சட்டத்தின்மூலம் அதிகாரசபை தாபிக்கப்பட்டு 24 ஆண்டுகள் கடந்திருந்தபோதிலும் நடைமுறை திருத்தங்களை உள்ளடக்கி சட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 நிதியத்தின் குறை பயன்பாடு

2007 ஆம் ஆண்டில் வரவுசெலவுத் திட்டத்தின்மூலம் ஆபரண கைத்தொழிலின் அபிவிருத்தி மற்றும் மேம்பாடு பொருட்டு உருவாக்கப்பட்ட ஆபரண அபிவிருத்தி நிதியம் பொருட்டு ஆபரண தொழில்நுட்பவலர்களிடமிருந்து வருடாந்தம் அறவிடும் ரூ.5,000 பதிவுக் கட்டணம்மூலம் பணம் சேகரித்திருந்த போதிலும், 2012 மற்றும் 2013 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ரூ.3,793,470 ஆன செலவிடல் தவிர்ந்த வேறு ஏதேனும் பணி இந்த நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் மீளாய்வாண்டு இறுதியில் அதன் மீதி ரூ.65,740,000 ஆக இருந்தது.

## 4.4 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீதாவாக்கை ஆறு இரத்தினக்கல் அகழ்தல் செயற்றிட்டத்தின் குழிகளை கழுவுவதற்காக ரூ.907,500 க்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த பொறியொன்று மற்றும் குறித்த செயற்றிட்டத்தின் பாவனைக்காக ரூ.303,148 க்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த நாரிழை படகு ஒன்று 2017 மார்ச் மாதத்திலிருந்து பயன்படுத்தப்படாமல் பாதுகாப்பின்றி வைக்கப்பட்டுள்ளன.

(ஆ) காலி தங்க அளவை நிச்சயப்படுத்தும் ஆய்வுகூடத்தில் காணப்படும் வெள்ளி பொருட்களை பொறியிடும் பொறியொன்று 2015 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படாதிருந்தது.

## 4.5 பதவியினர் நிர்வாகம்

-----------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் இல. DMS/Policy/3 மற்றும் 2013 நவம்பர் 01 ஆம் திகதிய கடிதம்மூலம் திருத்தப்பட்டவாறு அதிகாரசபையின் பதவிகள் பொருட்டு புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்தை திருத்திக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருந்தும், அவ்வாறு திருத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒட்டுமொத்த நிறுவனம் பொருட்டான ஆட்சேர்ப்புத் திட்டங்களை ஒரேதடவையில் அங்கீகரித்துக் கொள்ளாமல் இருந்ததுடன் அடிக்கடி அங்கீகரித்துக் கொள்வதன்மூலம் பதவிகள் மற்றும் தகைமைகள் முறையாகவும் சீராக்கத்துடன் பேணுவதற்கு முடியாமல் இருந்தது.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் இல. DMS/E 2 /33/7/213/3 கொண்ட 2011 நவம்பர் 03 ஆம் திகதிய கடிதம் பிரகாரம் ஆட்சேர்ப்புத் திட்டம் அங்கீகரித்துக் கொண்டதன் பின்னரே புதிய ஆட்சேர்ப்பு மேற்கொள்ள வேண்டியபோதிலும், 04 பதவிகள் பொருட்டு ஆட்சேர்ப்பு செய்ததன் பிற்பாடு ஆட்சேர்ப்புத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு அங்கீகரித்துக் கொள்ளாமல் 03 பதவிகளுக்கு ஏற்புடையதாக 13 அலுவலர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(இ) அதிகாரசபையின் பதவிகளுக்கு ஏற்புடையதாக கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைகள்மூலம் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருப்பினும், நேர்முகப் பரீட்சைகளில் புள்ளிகள் வழங்கும் திட்டம் வெளிப்படையாக விபரமாக தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, நேர்முகப் பரீட்சை சபை அதனது தற்றுணிபின்படி செயலாற்றக்கூடியதாக இருந்தது.

(ஈ) விளம்பர அலுவலர் பதவி பொருட்டு 09 விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் அடிப்படை தகைமைகள் இல்லாத ஒருவர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார். நேர்முகப் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்ட இந்த பெண் அலுவலருக்கு சேவை அனுபவம் இல்லாதிருக்கையில் அதற்காக 15 புள்ளிகளும், வேறு தகைமைகள் இல்லாதிருக்கையில் அதற்காக 03 புள்ளிகளும் வழங்கப்பட்டு இருந்தமை சர்ச்சைக்கு வழிவகுத்திருந்தது.

(உ) உதவிப் பணிப்பாளர்(காணி மற்றும் பிராந்திய அபிவிருத்தி) பதவிகளுக்கு ஏற்புடையதாக ஆட்சேர்ப்பு தகைமைகளை பூர்த்திசெய்திராத 05 அலுவலர்கள் குறித்த பதவிக்கு பதவியுயர்வு செய்யப்பட்டிருந்ததுடன் உதவிப் பணிப்பாளர்(பெறுகை) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக 2015 மே 22 ஆம் திகதி இயைபான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் ஆட்சேர்ப்பு செய்யப்படாமல் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து உதவி முகாமையாளர்(வழங்கல்) பெண் அலுவலர் குறித்த பதவியின் கடமைகளை நிறைவேற்றி வந்தார். மேலும், 2003 யூன் 02 திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது தொழில்முயற்சி சுற்றறிக்கையின் 9.3(vii) ஆம் பிரிவின் பிரகாரம், 03 மாதங்களுக்கு மட்டுமே பதில் கடமையின் நிமித்தம் நியமிக்கப்பட வேண்டியபோதிலும் அதற்கு முரணாக ஒரு வருடத்துக்கு மேற்பட்ட காலத்திலிருந்து வெற்றிடமாக இருந்த திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை, பணிப்பாளர்(ஏற்றுமதி) பதவியின் பதிற்கடமை பணிப்பாளர்(காணி, சுற்றாடல் மற்றும் அகழ்தல்) அவர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஊ) அதிகாரசபையின் சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்த அலுவலர்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கல்வி மற்றும் தொழிற்றுறை தகைமைகள் தொடர்பிலான சான்றிதழ்கள் இயைபான நிறுவனங்களினால் உறுதிப்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) நிறைவேற்றுத்தரம் அல்லாத மட்டத்திலான அலுவலர்களுக்கு பதவியுயர்வு, பயிற்சி மற்றும் வருடாந்த சம்பள ஏற்றம் வழங்குகையில் வருடாந்த செயலாற்றலை மதிப்பீட்டுக்கு உட்படுத்த வேண்டிய போதிலும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

--------------------------------

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலட்சியங்களை அடைதல்

---------------------------------------------------------------

2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டிஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சு செயலாளரினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பிலான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ''நிகழ்ச்சி நிரல்'' பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனமும் செலாற்ற வேண்டியபோதிலும் தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை அதுதொடர்பில் அறிந்திராத காரணத்தினால் தமது விடயப்பரப்புக்கு ஏற்புடைய பணிகள் தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி இலட்சியங்கள், இலக்குகள் மற்றும் குறித்த இலக்குகளை அடைவதற்கு வேண்டிய சந்தர்ப்பங்களும் இலக்குகளின்படி அடைதலை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------

### 6.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

----------------------------------------

2003 யூன் 02 திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது தொழில்முயற்சி சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் நிதிக் கூற்றுக்களையும் வரைவு வருடாந்த அறிக்கையையும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியபோதிலும், மீளாய்வாண்டுக்கு ஏற்புடைய அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 03 ஆம் திகதியே கணக்காய்வு பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வு திகதியான 2018 மே 04 ஆம் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.2 உள்ளகக் கணக்காய்வு

---------------------------

2017 ஆம் ஆண்டின் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம்மூலம் பரீட்சிப்பதற்கு இலக்காகக் கொள்ளப்பட்டிருந்த 19 பரிசோதனை பணிகள் ஆண்டினுள் நிறைவேற்றி இருக்கவில்லை என்பதுடன் நிதிப்பிரமாணம் 133(2) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் நிறுவனத்தின் கணக்கு அறிக்கைகள், அட்டவணைகள் மற்றும் குறிப்புக்களின் நம்பகத்தன்மையை பரீட்சிக்க வேண்டிய போதிலும் அதுதொடர்பில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6.3 பெறுகை மற்றும் ஒப்பந்த செயன்முறை

-----------------------------------------------

### 6.3.1 பெறுகைகள்

----------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையினால் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பிரதான அலுவலகம் பொருட்டு புதிய கட்டடமொன்றை நிருமாணித்தல், தெமுவாவக சருவதேச இரத்தினக்கல் நிலையத்தை நிருமாணித்தல் மற்றும் கதிர்காமம் விடுமுறை விடுதியை நிருமாணித்தல் போன்ற ரூ.1,593 மில்லியன் ஆன 03 செயற்றிட்டங்கள் பொருட்டு பெறுகை வழிகாட்டுநெறிகளுக்கு இணங்க ஒப்பந்தகாரர்களையும் ஆலோசகர்களையும் தெரிவு செய்ய வேண்டிய போதிலும் அதற்கு முரணாக அமைச்சரவைப் பத்திரம்மூலம் ஒப்பந்தகாரர்களையும் ஆலோசகர்களையும் தெரிவு செய்வதற்கும் அங்கீகாரம் பெறுவதற்கும் நாடப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபையின் பிரதான அலுவலகக் கட்டடத்தை நிருமாணிக்கும் பெறுகைக்கு ஏற்புடைய அமைச்சரவைப்பத்திரம் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் பொறியியல் பணிகள் பொருட்டான மத்திய ஆலோசனை பணியகத்திற்கு முன்வேலை முற்பணமாக ரூ.2,300,000 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) இரத்தினபுரி தெமுவாவக இரத்தினக்கல் நிலையத்தை நிருமாணித்தல் சம்பந்தமான பெறுகை செயன்முறையை ஆரம்பிப்பதற்கு முன்னர் இரத்தினபுரி பிரதேசச் செயலாளருக்குச் சொந்தமான கட்டடமொன்றை இடித்து அகற்றுவதற்கு அத்துடன் அதில் இருந்த அலுவலகத்தை அதிகாரசபையில் நிறுவும் பொருட்டு ரூ.2,819,258 செலவு உறப்பட்டிருந்தது.

### 6.3.2 ஒப்பந்த செயன்முறையின் குறைபாடுகள்

-----------------------------------------------

(அ) எஹலியகொட அலுவலக கட்டடத்தை நிரமாணித்தல்

-----------------------------------------------------------------

மேற்படி அலுவலகக் கட்டடத்தை நிருமாணிக்கும் முகமாக 2017 மார்ச் 06 ஆம் திகதி உடன்படிக்கை செய்துகொண்டு ரூ.180.97 மில்லியன்க்கு சுபசிங்க கன்ரக்டர்ஸ் அன்ட் எர்த் மூவர்ஸ் நிறுவனத்துக்கு ஒப்பந்தம் அளிக்கப்பட்டிருந்ததுடன் இதுசம்பந்தமாக பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) இயைபான நிருமாண இடத்தின் மண்ணின் தன்மையின்படி கட்டடம் பொருட்டு **பவுறு** அடிப்படையில் அத்திவாரமொன்றை இடுவதற்கு பொறியியல்சார் பணிகள் தொடர்பில் மத்திய ஆலோசனை பணியகத்தின் புவிசார் பௌதிக பிரிவு பரிந்துரைத்திருந்தும் பின்னர் அப்பிரிவினால் இயைபான **பவுறு** அடிப்படையில் அத்திவாரத்திற்குப் பதிலாக கோபுர அடிப்படையிலான அத்திவாரம் இடுதல் அங்கீகரிக்கப்பட்டு அதற்கான செலவுமதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது.

(ii) கட்டட நிருமாணம் பொருட்டான மொத்த செலவுமதிப்பீடு ரூ.199.97 மில்லியன் ஆன போதிலும் நிலத்தின் தன்மையின்படி அமைப்பதற்கிருந்த 42 கோபுரங்களில் 15 உரிய விதத்தில் அமைப்பதற்கு முடியாமல் இருந்ததுடன் தரம் குறைந்த கொங்கிறீட்டு இட்டு நிலத்தை இறுக்கி திரும்பவும் கோபுரங்களை அமைப்பதற்கு நேரிட்டிருந்தது. இதன் காரணமாக ரூ. 35.8 மில்லியன் மேலதிக செலவினை

உறப்பட வேண்டியிருந்தது. அதனால், சம்பந்தப்பட்ட மொத்த செலவு ரூ. 235.77 மில்லியன் ஆக இருந்தமையினால் பெறுகை வழிகாட்டுநெறி இலக்கம் 8.13.4 பிரகாரம் அமைச்சு பெறுகை குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) நிருமாணம் தொடர்பிலான தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பினால் செய்யப்பட்டிருந்த பரிந்துரைகளின் பிரகாரம் அத்திவாரத் திட்டம் பட்டய சிவில் பொறியியலாளரால் மேற்கொள்ள வேண்டிய போதிலும் அதன்பிரகாரம் செயலாற்றியிருக்கவில்லை.

(iv) கட்டடத்தை நிருமாணிப்பதற்கு முன்னர் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் அவ்வங்கீகாரம் பெறப்படாமல் நிருமாணம் 2017 ஏப்ரல் 04 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(v) நிருமாணிப்பதற்கு ஏற்புடைய பொறியியலாளர் செலவுமதிப்பீடு தயாரிக்கப்பட்ட நிருமாணம் சம்பந்தமாக மத்திய ஆலோசனை பணியகத்திற்கு ஆலோசனை சேவை வழங்கப்பட்டிருந்ததுடன் அதன்படி செலவுமதிப்பீட்டில் நூற்றுக்கு 4.85 சதவீதம் ஆகும்வண்ணம் ஆலோசனைக் கட்டணம் பொருட்டு உடன்பட்டிருந்தது. செய்துகொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின்படி செலுத்த வேண்டிய ஆலோசனைக் கட்டணம் ரூ.6.62 மில்லியன் ஆன போதிலும் ரூ. 9.7 மில்லியன் ஆலோசனைக் கட்டணத்துக்குரிய பணிகளை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இரத்தினக்கல், ஆபரணங்களை பரீட்சிக்கும் நடமாடும் ஆய்வுகூடத்தை நிறுவுதல்**

---

(i) நடமாடும் ஆய்வுகூடத்தை நிறுவுவதற்குத் தேவையான விபரக்குறியீடுகளை உள்ளடக்கி விசேடமாக அமைக்கப்பட்ட வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்குப் பதிலாக ரூ.7,200,000 க்கு ஆசனம் அற்ற சாதாரண பயணிகள் வாகனமொன்றை கொள்வனவுசெய்வதற்கும் கொள்வனவுசெய்த வாகனத்தை ரூ.2,456,500 செலவுசெய்து ஆய்வுகூடமொன்றாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இருப்பினும், ஆபரணங்களை பரீட்சிக்கும் உபகரணங்களை பொருத்தாமை, வாகனத்தின் பின்புறம் வளிப்பதனாக்கி இல்லாமை, வெளி மின் சக்தியை பெறவேண்டியிருந்தமை, மாற்றல் கோளாறுகள் இடம்பெற்றமை போன்ற காரணங்களினால் ஆய்வுகூடத்துக்குத் தேவையான நியமம், தரம் மற்றும் வசதிகள் ஆகியவற்றை பேணுவதற்கு தவறி இருந்தது.

(ii) ஆய்வுகூடமாக மாற்றுகையில், வாகனத்தில் இருந்த ரூ.1,500,000 மதிப்பிடப்பட்ட பெறுமதியுடைய வளிப்பதனாக்கி பொறி கழற்றப்பட்டு அகற்றப்பட்டிருந்தது. அகற்றப்பட்ட பொறியை உரிய தரத்துடன் அதிகாரசபைக்கு பெற்றுக்கொண்டு மீண்டும் பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு அல்லது இயற்கையாக ஏற்படும் பெறுமதி குறைவைத் தடுப்பதற்கு உடனடியாக கைதவிர்ப்புச் செய்து உச்ச பெறுமதியை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் 2018 மே 04 ஆம் திகதிவரையிலும் செயலிழந்து காணப்பட்டது.

(iii) பெறுகை வழிகாட்டுநெறிகள் பிரகாரம் பிடிப்புப் பணம் வைத்துக் கொள்ளாமல் பேரூந்து வண்டியை ஆய்வுகூடமாக மாற்றியதன் பிற்பாடு செலுத்த வேண்டிய மொத்த தொகையைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(இ) சேவை உடன்படிக்கைகளை செய்துகொள்ளல் பெறுகை வழிகாட்டுநெறிகள் 2.14.1 பிரகாரம் வருடாந்தம் மேற்கொள்ள வேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டில் வளிப்பதனாக்கி பழுதுபார்த்தல் பொருட்டு ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் பேரில் அதற்குப் பின்னரான ஆண்டுகளிலும் ரூ.438,918 ஆன பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டு இருந்தது.

## 6.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம், செலவினத்திற்கு இடையில் நூற்றுக்கு 22 முதல் முதல் 1112 வரையான வீச்சிலான வேறுபாடு அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6.5 தீர்க்கப்படாதிருந்த கணக்காய்வுப் பந்திகள்

தாபன விதிக்கோவையின் அத்தியாயம் II இன் 9.1 ஆம் பிரிவிற்கு முரணாக 60 வயதுக்கு மேற்பட்ட அலுவலரொருவர் அமைச்சரவையின் அங்கீகாரமின்றி கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தின் பேரில் மாத்திரம் 2012 ஒக்டோபர் மாதத்திலிருந்து ஒப்பந்த அடிப்படையின் கீழ் ஆலோசகராக ஆட்சேர்க்கப்பட்டிருந்தார்.

## 6.6 சுற்றாடல் மற்றும் சமூக பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் நேரடி தலையீட்டின் பேரில் செயற்படுத்தப்பட்டிருந்த சீதாவாக்கை ஆறு இரத்தினக்கல் அகழ்தல் செயற்றிட்டத்தின் அவத்தை III பொருட்டு மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் விதித்துரைக்கப்பட்ட 22 நிபந்தனைகளில் 10 நிபந்தனைகள் அதிகாரசபையினால் மீறப்பட்டிருந்தன. அதன்காரணமாக, 2016 ஒக்டோபர் 11 ஆம் திகதி முதல் செயற்றிட்டத்தை செயற்படுத்துதல் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் இடைநிறுத்தி இருந்த போதிலும், இடைநிறுத்தியதன் பின்னரும் 5 மாதங்கள் செயற்றிட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டிருந்தது. மேலும், செயற்றிட்டத்தின் அகழ்தல் நடவடிக்கை காரணமாக அரிப்புக்கு உள்ளாகியிருக்கும் சீதாவாக்கை ஆற்றின் இடப்பக்க வரம்பை உரிய நிலைக்கு கொண்டுவருதல் நீர்ப்பாசன திணைக்களத்தின் தொழில்நுட்ப அறிவுறுத்தலின் கீழ் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் இந்த அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தும், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முறையற்ற விதத்தில் கைவிடப்பட்டிருந்த அகழ்வு குழிகளின் புனரமைப்பு வேலைகள் தரங்குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் கணக்காய்வுக்கு உட்பட்ட 10 குழிகளை மூடும் ஒப்பந்தங்களில் 5 ஐ மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 07. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) வருமான வரி மிகை ஒதுக்கீடு கணக்குகளுடன் சீராக்காமை.<br><br>(ii) பயன்படுத்துகின்ற சகல நிலையான சொத்துக்களும் சரியான பெறுமதியின் அடிப்படையில் கணக்குகளில் பதியப்படாமை. |
| (ஆ) செயற்பாட்டு கட்டுப்பாடு | (i) இரத்தினக்கல் அகழ்தல் செயற்றிட்டத்தை செயற்படுத்துகையில் இரத்தினக்கல் அடங்கிய பெட்டியை திறக்கும்போது இருக்க வேண்டிய மேற்பார்வை குழு பற்றி தீர்மானிக்கப்படாமை.<br><br>(ii) பங்குபற்றியிருந்த மேற்பார்வை அலுவலர்கள் தொடர்பாகவும், இரத்தினக்கல் அடங்கிய பெட்டியை திறத்தல் மற்றும் இரத்தினக்கற்களை வங்கியில் வைப்புச் செய்தல் தொடர்பாகவும் உரிய அறிக்கையிடல் மேற்கொள்ளப்பட்டிருக்காமை.<br><br>(iii) ஏலவிற்பனை செய்யப்படும் இரத்தினக்கற்கள் விலைமதிப்புக்காக வகைப்படுத்தல், விலைமதிப்பிடல் மற்றும் ஏலவிற்பனை செய்வதற்காக அலுவலர்களை முறையான நியமிக்காமை, அதுதொடர்பில் அறிக்கைகள் பேணப்படாமை மற்றும் ஆவணங்களில் கையொப்பம் இடுதலை முறையாக மேற்கொள்ளாமை.<br><br>(iv) ஏற்றுமதியாளர்கள் கண்காட்சிகள் பொருட்டு இரத்தினக்கற்களை எடுத்துச் செல்கையில் ஏற்றுமதியாளரினாலேயே இரத்தினக்கற்களின் பெறுமதி தீர்மானிக்கப்படுதல் மற்றும் பெற்றுக்கொள்ளப்படும் காப்புறுதிச் சான்றிதழ்களின் பிரதிகள் அதிகாரசபைக்கு பெற்றுக்கொள்ளப்படாமை.<br><br>(v) எடுத்துச் செல்லப்படும் இரத்தினக்கற்களின் பெறுமதியின்படி முகாமைத்துவக் கட்டணம் அறவிடப்பட்டிராமை.<br><br>(vi) ஏற்றுமதியாளர்கள் கண்காட்சிகள் பொருட்டு எடுத்துச்சென்ற இரத்தினக்கற்களை திரும்ப கொண்டுவருகையில் அது எடுத்துச்செல்லப்பட்ட இரத்தினக்கல்தான் என சுங்கம் மற்றும் ஆய்வுகூடம் முத்திரை இட்டு உறுதிப்படுத்தி இருக்காமை.<br><br>(vii) ஒவ்வொரு ஏற்றுமதியாளர் பொருட்டு வெவ்வேறான கோப்புக்கள் பேணப்பட்டிருக்காமை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | முற்பணக் கட்டுப்பாடு | (i) | காசோலைமூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவுகள் பொருட்டு முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தமை. |
| | | (ii) | முற்பணங்களை கொடுத்துதீர்த்த பணவுறுதிப் பத்திரங்களில் கொடுத்துதீர்த்த திகதி, முற்பணத்தொகை மற்றும் அலுவலரின் பெயர் என்பன குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமையினால் பணவுறுதிப் பத்திரங்கள் முழுமையடைந்திராமை. |
| | | (iii) | முற்பண ஆவணம் உரியவாறு பேணப்பட்டிருக்காமை. |
| (ஈ) | வாகன நிருவாகம் | | அதிகாரசபையின் 13 வாகனங்களுக்கு ஏற்புடைய வாகன அசைவுப் பதிவேடுகள் மற்றும் வாகன லொங் குறிப்புப் புத்தகங்கள் உரியவாறு பேணப்பட்டிருக்காமை. |
| (உ) | பதவியினர் நிருவாகம் | (i) | ஆட்சேர்ப்புத் திட்டத்தை அங்கீகரித்துக் கொள்ளாமை. |
| | | (ii) | அலுவலர்களின் கல்வி மற்றும் தொழிற்றுறை தகைமைகளை உறுதிப்படுத்திக் கொள்ளாமை. |
| | | (iii) | வருடாந்த சம்பள ஏற்றம் வழங்குகையில் செயலாற்றலை மதிப்பீட்டுக்கு உட்படுத்தாமை. |